RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s208

# கொமோரோ நாவலில் உறவுகளின் கட்டமைப்பும் வன்மத்தின் வெளிப்பாடும்

**அ. ராஜா முகமது** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை-642126, தமிழ்நாடு, இந்தியா.

# The Structure of Relationships and the Expression of Hatred in the Novel ‘Gomorrah’

**A. Raja Mohammed** [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Udumalaipettai-642126, Tamil Nadu, India

* Corresponding Author: afraja97@gmail.com

Received: 20-06-2022
Revised: 11-10-2022
Accepted: 25-10-2022
Published: 05-11-2022

**ABSTRACT**

If we study where the origin of relationships comes from, it has to start with feminism. Although adam, a male being, was created primarily, it is reported that adam was created from the spine of Eve. The relationship between man and woman develops in the relationship of husband and wife. From these relationships, blood relationships change into non-blood relationships. It highlights the relationship between son and daughter and the loveless relationship between father and son, and the son murdering his father. It explains the advantages and disadvantages of Kathir in bloodless relationships such as friends, girlfriends, relatives, etc. It speaks of Kathir's conversion to a different position due to the friendship of his friend Chandran and the transformation of Murugan into a position to kill his father due to his evil friendship. In such relationships, it also explains in what way the husband, wife, relatives, etc., in the family relationships, are doing good to Kathir.

**Keywords:** Relationship, Gomorrah, love, Friendship

## முன்னுரை

நவீன இலக்கியங்களின் பாடுப்பொருள்கள் காலந்தோறும் வளர்ந்து கொண்டே வருகின்றன. இந்நிலையில் நவீன இலக்கியங்களில் இடம்பெறும் கதாபாத்திரங்களின் வழி வெளிப்படும் உறவுகளின் நிலையையும், அதன் காரணமாக ஏற்படும் விளைவுகளையும் ஆராய வேண்டிய தேவையுள்ளது. தற்காலத்தில் உறவுகளின் நிலை குறித்தான செய்திகளை மக்களுக்குத் தெளிவுபடுத்தும் விதமான நாவல்கள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளன. லஷ்மி சரவணக்குமாரின் “கொமோரோ” நாவலானது உறவுகளுக்குள் ஏற்படும் வன்மத்தின் விளைவுகளை உணர்த்துகிறது. கொமொரோ நாவலில் இடம்பெற்றுள்ள உறவுகளின் கட்டமைப்பையும், உறவுகளின் நிலையையும் எடுத்துரைப்பதாக இவ்ஆய்வானது அமைகிறது.

## குடும்பம்

குடும்பம் என்னும் அமைப்பானது முதலில் கணவன் மனைவி என்கிற நிலையில் ஆரம்பமாகிறது. குடும்பத்தின் முக்கிய அங்கங்களாக ஆணும் பெண்ணும் சேர்ந்து மனம் ஒத்து திருமணம் என்ற நிலையில் கைகோர்த்து கணவன் மனைவியாக உறவுகளைத் தொடர்கின்றனர்.

இதனை எடுத்துரைப்பதாக, “குடும்ப உறவுக்கு அடிப்படையாக இருப்பது மணம் புரிந்து கொண்ட ஆணும் பெண்ணும் அன்பு கொண்டு ஒருவர் மற்றவருக்காக விட்டுக் கொடுக்கத் தொடங்கும்போது சுயநலம் மறைந்து மற்றவர் நலம் கருதக்கூடிய குடும்பத்தின் சிறப்பு புலப்படுகிறது” என்னும் பாஸ்கல் சிஸ்பர்ட்டின் கருத்து உணர்த்துகிறது (Pascual Gisbert, 1964).

குடும்பம் என்பது கணவன், மனைவி இருவரின் ஒன்றுபட்ட அன்பு என்பதனை உரைப்பதாக,” குடும்பம் என்னும் அமைப்பு குடும்பத்தின் தலைவன் தலைவி என்னும் இருவரின் அன்புறவையே மூலக்கருவாகக் கொண்டு வளர்கிறது. அது சமுதாயமாக விரிவடைகிறது. குடும்பம் சிறக்க வேண்டுமானால் அதற்கு தனிமனித ஒழுக்கத்தின் மேன்மை மிகவும் இன்றியமையாதது” எனும் திரு.வி.க. வின் கருத்தானது அமைகிறது (Mahalingam, 2005).

## குடும்பத்தின் உறவுநிலை

குடும்பம் என்பது கணவன், மனைவி இருவரை மட்டும் கொண்டதல்ல, பிள்ளைகள் என்ற உறவின் வளர்ச்சிநிலையையும் கொண்டுள்ளது. பிள்ளைகள் குடும்பத்தின் இரத்த உறவுகளாக இருக்கின்றனர்.

“குடும்பம் கணவன், மனைவி, பிள்ளைகள் என்ற அமைப்பில் அமைந்திருக்கிறது. அது பல உறவுமுறைகளைச் சேர்ந்த மரபுவழி இணைப்புகளின் பல்வேறு அம்சங்களையும், நெருங்கிய மற்றும் தூர உறவுகளது கிளைகளின் நிகராலிகளையும் சேர்த்துக் கொண்டிருக்கும்” என்ற வரிகள் குடும்பத்தின் அங்கமாய் பிள்ளைகள் உள்ளமையை தெளிவுப்படுத்துகிறது (Engels, 1989).

குடும்பத்தில் மேலும் உறவுகள் உள்ளமையை “குடும்பம் என்பது கணவன், மனைவி, பிள்ளைகள் உறவு என்று பல உறவுகள் பிண்ணிப் பிணைந்திருக்கும் தொகுதியாகும்” என்கிற வரிகள் வெளிக்காட்டுகின்றன (Balusamy, 1992).

## கொமோரோ நாவலில் உறவுகளின் கட்டமைப்பு

கொமோரோ நாவலில் பல்வேறு உறவுகளின் நிலையானதாக அமைந்துள்ளது. அவற்றுள் கணவன், மனைவி, நண்பர்கள், காதலி என்ற உறவுநிலைகளை எடுத்துரைப்பதாக ஆய்வானது அமைகிறது. இவற்றுடன் தந்தை மகன் என்ற உறவுகளின் நிலையையும் உரைக்கிறது.

## கணவன் மனைவி உறவுநிலைகள்

### கோவிந்தசாமி, மனைவி உறவுநிலை

கோவிந்தசாமி, கம்போடிய நகரில் இந்திய உணவகம் வைத்திருப்பவர். இவருடைய மனைவி உணவகத்தை நடத்துவதற்கு உதவி செய்பவள். இவர்களுடைய மகன் அழகர்சாமி. கோவிந்தசாமி தன் மனைவியின் மீது மிகுந்த அன்பு உடையவன். இருவரும் தங்களின் நிலையை உயர்த்திட வேண்டி இருவரும் அன்புடன் உணவகத் தொழிலை செய்து வந்தனர்.

### அழகர்சாமி, மனைவி உறவுநிலை

அழகர்சாமி கதிரின் தந்தை. கதிர் பிறந்தவுடன் அழகர்சாமி தன் மகனையும், மகளையும் விட்டு வெளியேறிவிட்டார். அழகர்சாமிக்கு மனைவியின் மீது அன்பு கிடையாது. “அழகர்சாமி தீயவனாக இருக்கும் நிலையை எப்போதும் குற்றத்தின் நறுமணம் வீசும் அவர்” என்ற வரிகள் வெளிக்காட்டுகின்றன (Lakshmi Saravanakumar, 2018). அழகர்சாமி மனைவியுடன் இல்லாமல் வேறொருவருடன் இருப்பதை” அவர் நீண்ட காலம் அவர்களோடு இருந்ததில்லை. சில மாதங்கள் அங்கும், சில மாதங்கள் வேறு இடங்களிலுமாய்ச் சுற்றிக் கொண்டிருந்தார்” என்ற வரிகள் அழகர்சாமி

ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களுடன் தீய உறவு கொண்ட நிலையை உணர்த்தி நிற்கின்றன (Lakshmi Saravanakumar, 2018).

இத்தகைய தீயச் செயல்களை எல்லாம் செய்பவனாக அழகர்சாமி இருந்தாலும் அவனின் மனைவி அவரை வெறுக்காமல் தன் பாதுகாப்பு கருதியே உடன் வைத்திருக்கிறாள் என்பதனை, "அம்மா அவரின் இருப்பைப் பாதுகாப்பென நம்பினாள்" எனும் வரிகள் புலப்படுத்துகிறது (Lakshmi Saravanakumar, 2018).

## முருகன், சக்தி உறவுநிலை

முருகன், சக்தி இருவரும் கணவன் மனைவி. சக்திக்கு முருகனின் மீது மிகுந்த அன்பு உண்டு. ஆனால் முருகனுக்கு சக்தியின் மீது அன்பு இல்லை. சக்தி முருகன் மீது உண்மையான அன்பினை கொண்டிருந்தாள் என்பதனை, "தன் நடவடிக்கைகளில் ஒழுக்கமானவனாகவும், தேர்வுகளில் நளினமானவாகவும் இருந்த முருகனோடு இருந்த பொழுதுகளில் சக்தி மனப்பூர்வமாய் நேசித்தாள்" என்ற வரிகளில் காணலாகிறது (Lakshmi Saravanakumar, 2018). ஆனால் முருகன் சக்தியின் மீது அன்பு இருந்தாலும் அது முழுமையானதாக இருக்கவில்லை.

முருகன் கதிரின் மீது தவறான ஈர்ப்பினை கொண்டிருந்தான். குடிபோதையில் இருவரும் உணர்ச்சியற்ற நிலையில் கூடி இருந்ததை கண்ட சக்தி, முருகன் தன் மீது அன்பு கொள்ளவில்லை என்பதை சக்தி உணர்கிறாள். இதனை, "வெறுப்பின் எந்த சுவடுகளையும் காட்டிக் கொள்ளாமலேயே சக்தி தன் தாய் வீட்டிற்குக் கிளம்பிப் போயிருந்தாள். ஏமாற்றப்பட்ட அன்பின் ரணம்" எனும் வரிகளில் சக்தி ஏமாற்றப்பட்ட நிலையை நாவலாசிரியர் உணர்த்துகிறார் (Lakshmi Saravanakumar, 2018).

## கதிரின் நண்பர்கள் உறவுநிலை

சந்திரன் மற்றும் முருகன் இருவரும் கதிருடைய நண்பர்கள். சந்திரன் சிறுவயதில் இருந்தே கதிருக்கு நெருங்கிய தோழன். சந்திரனுக்கு கதிரின் வாழ்க்கையில் மிகுந்த அக்கறை உள்ளது. கதிர் குடும்பச் சூழ்நிலையில் சந்திரனுடன் வேலைக்கு போக கேட்க்கும் பொழுது "வேற வேலக்கிப் போடா பங்காளி. இந்தத் தொழில் வேணாம். நீ வீட்ல கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ்ல படிக்கிறதுக்கு ஆகற செலவ நான் பாத்துக்கறேன். படிப்ப விடாத" என்று சொல்லி அவன் மீது உள்ள அக்கறையை வெளிப்படுத்தினான் (Lakshmi Saravanakumar, 2018). சந்திரன் சாராயத் தொழில் செய்பவனாக இருந்தாலும் தன்னுடைய நண்பனை அத்தொழிலில் ஈடுபடுத்தக் கூடாது என உறுதியாக இருந்த நிலையை அறிய முடிகிறது.

முருகனின் நட்பு கதிருக்கு இடைக்காலத்தில் கிடைத்தது. முருகனின் உணவகத்தில் வேலை செய்பவனாக கதிர் இருந்தான். முருகனுக்கு கதிரின் மீது தவறான உணர்ச்சி ஈர்ப்பின் காரணமாக நட்புக் கொண்டான். முருகனின் தவறான உணர்ச்சியினை" "கதவைத் திறந்த சக்தி இருவரின் கூடலையும் பார்த்து சகிக்க முடியாமல் மீண்டும் கதவைச் சாத்திக் கொண்டாள்" எனும் வரிகள் வெளிக்காட்டுகிறது (Lakshmi Saravanakumar, 2018). மேலும் கதிர் தன் தந்தையை கொலை செய்ய நினைப்பதாகக் கூறும் பொழுதுகூட தடுக்காமல் அவனுக்கு உதவி செய்கிறான் முருகன். முருகன் கதிருக்கு தந்தையைக் கொலை செய்ய உதவியதை, "இங்கு பாரு, அவர் கழுத்த கட்டிலோட சேத்து இழுத்து நான் வேக வேகமாக கட்டி சத்த போடாம புடிச்சுக்குவேன்" என்ற வரிகள் எடுத்துரைக்கிறது (Lakshmi Saravanakumar, 2018). தீய நட்பின் விளைவாக உண்ணதமான உறவாக கருதப்படும் தந்தையையேக் கொல்லக்கூடிய நிலைக்கு மாற்றம் பெறும் சூழலை உணர்த்துகிறது.

## கதிரின் காதல் உறவுநிலை

கதிரின் காதலி சத்யா. சத்யா உயர்ந்த சாதியை சேர்ந்த பெண். கதிர் சத்யாவை உண்மையாக விரும்புகிறான். இருவரும் காதல் மிகுதியால் ஒன்றுகூடல், குழந்தை உண்டாதல். இதன் விளைவாக

இருவரும் திருமணம் செய்து கொள்ள நினைத்து சென்றச் சூழலில் போலிசிடம் சிக்கிக் கொள்கின்றனர். சத்யாவை அழைத்து வந்த அவளுடைய தந்தை சாதிவெறியால் அவளை தீயிட்டு எரித்துவிடுகிறார். சத்யாவின் மீது கதிர் கொண்டிருந்த அலப்பிரியாத அன்பு அவர்களின் உறவினர்கள் இவனை எரிக்க நினைத்தபோது வெளிப்பட்டமையை" சத்யாவை எரித்த பெட்ரோல் அவன் மீதும் ஊற்றப்பட்ட போது உதவிக்காக கதிர் கத்தி அழக்கூட இல்லை. சத்யாவோடு என்றென்றைக்கும் சேர்ந்துவிட்டால் போதுமெனத் தன்னை சூழ இருந்த நெருப்பிற்காக கண்ணீரோடு காத்திருந்தான்" என்ற வரிகள் புலப்படுத்துகின்றது (Lakshmi Saravanakumar, 2018). இறந்தாவது சத்யாவிடம் சேர வேண்டும் என்ற கதிரின் காதல் அன்பு வெளிப்பட்டமையை உணர்த்துகிறது.

## தந்தை மகன் உறவுநிலை

தந்தை மகன் உறவுநிலை என்பதனுள் கதிரின் அப்பாவிற்கும், விஜியின் அப்பாவிற்கு இடையே உள்ள அன்பு வேறுபாட்டினையும், அன்பின்மையால் தந்தைக் கொள்ளப்படுவதையும் அன்பினால் தந்தை இறப்பதையும் காணலாம்.

## விஜியின் தந்தை

விஜியின் தந்தை ஆனந்தன். சவரத் தொழிலாளி. ஆனந்தனை ஊரில் உள்ள சில மக்கள் அவரை தொழில் அடிப்படையில் அம்பட்டையன் எனும் பெயர் வைத்து ஏளனப்படுத்துவது வழக்கமாக இருந்து வந்துள்ளது. ஆனந்தன் மாற்றுக் காலங்களில் ஐசு வண்டி போடுவது வழக்கம்.

"எல்லோருக்கும் குறையாத சிரிப்போடு ஐஸைக் கொடுத்த ஆனந்தன் அவர்களுக்கும் கொடுத்தார்" என்னய்யா ஐசுல மயிர் கெடக்கு?" என அவர்களில் ஒருவன் அங்கேயே வம்பிழுக்க, பக்கத்திலிருந்தவன் அம்பட்டையன் கடைல ஐசு வாங்கினா அப்பிடித்தாண்டா இருக்கும். அப்பேயே சொன்னேன் கேட்டியா?" என்ற வரிகளில் ஆனந்தன் திருவிழா காலங்களில் குலத்தொழிலை விட்டு மாற்றுத் தொழிலில் ஈடுபடும் போது கூட அம்பட்டையன் என்ற குலத்தொழில் பெயரை சொல்லியே ஏளனம் செய்கின்றனர் (Lakshmi Saravanakumar, 2018). இத்தகைய சூழலை அறிந்த விஜி தன் தந்தையை இழிவுப்படுத்தியதை தாங்கிக் கொள்ளாமதல் அவர்களை எதிர்க்கிறான். அதன் விளைவாக சிறைக்கும் செல்கிறான்.

சிறைச்சாலையில் சிலரின் நட்பினால் எதிர்ப்புகளை அடைகிறான். எதிரிகள் விஜியைக் கொல்ல நினைக்கின்றனர். அப்பொழுது விஜி பெயில் மூலம் வெளிவருகிறான். விஜி உயிர் பயத்தால் மீண்டும் சிறைக்கு செல்லாமல் வெளியூர் செல்ல நினைக்கிறான். அச்சூழலில் மகனைக் காக் வேண்டி வெளியூர் அனுப்பிவிட்டு, அவனிடம் இருந்து வாங்கிய லுங்கியை அணிந்து தீயிட்டுக் கொள்கிறார். மகன் வெளியூர் சென்றதாக அவருக்கு தெரியும், மக்கள் தீயிட்டு தன்னையே எரித்துக் கொண்டதாக விஜியையே பார்த்தனர். இறந்தது ஆனந்தன் விஜி அல்ல. தன் மகன் வாழவேண்டும் என்ற அன்பினால் ஆனந்தன் தனக்கே தீவைத்து எரித்த நிலையை "தன் மகனை ஒருபோதும் யாரும் தேடக் கூடாதென்பதற்காக விஜியின் அய்யா தன்னைத் தானே தியாகம் செய்திருப்பதை யாருக்குச் சொல்ல முடியும்?" என்னும் வரிகள் உணர்த்தி நிற்கின்றன (Lakshmi Saravanakumar, 2018).

## கதிர் அழகர்சாமி உறவுநிலை

கதிரின் தந்தை அழகர்சாமி. கதிர் பிறந்த கொஞ்ச வருடங்களில் அழகர்சாமி கதிரையும் அவன் அம்மாவையும் கவனிப்பதில்லை. சில நேரங்களில் வீட்டிற்கு வருபவராகவும் வராதவராகவும் இருந்துள்ளார். இதன் காரணமாக கதிரை அவன் அம்மாவாள் கவனித்துக் கொள்ள முடியவில்லை. இவற்றின் விளைவாக கதிரை சிறு வயதிலேயே அவள் அம்மா சிறுவர் காப்பகத்தில் சேர்த்திவிடுகிறாள். தான் காப்பகத்தில் சேர்க்கப்பட்டதற்கு காரணம் தந்தைதான் என் எண்ணம் அவன் மனதில் வன்மமாக தொடக்கம் பெறுகிறது. காப்பகத்தில் சொல்லப்பட்ட இடிபஸின் கதையில்

தந்தையை மகன் கொல்லும் கதை அக்கதையில் மகனாக தன்னையும் தந்தையாக அழகர்சாமியை நினைத்துக் கொள்வான். "யாரெல்லாம் தன் மீது வன்முறையைப் பிரயோகிக்கிறார்களோ அப்போதெல்லாம் தன் தந்தையைக் கொலை செய்வதாகவே நினைத்துக் கொள்வான். பதிமூன்று வயதிற்குள்ளாக பல்லாயிரம் முறை அவன் மனம் அவரைக் கொலை செய்திருந்தது" என்ற வரிகள் சிறுவயதில் தந்தையின் மீது கொண்டிருந்த கொலையுணர்வை வெளிப்படுத்துகிறது (Lakshmi Saravanakumar, 2018). தன் தந்தையால் நல்உறவுகளையும் கதிரால் பெறமுடியவில்லை. காரணம் தந்தை தீயவர்களுடனே தொடர்பு கொண்டிருந்தார் என்பதனை, "அவர் அவனுக்கு தந்ததெல்லாம் தன்னைப் போன்ற மனிதர்களின் சகவாசத்தைதான். மனிதர்கள் வருவார்கள் மது அருந்துவார்கள்" எனும் வரிகள் உணர்த்துகிறது (Lakshmi Saravanakumar, 2018).

தன் தந்தையால் தனக்கு மட்டும் துன்பம் ஏற்படவில்லை அம்மாவிற்கும் துன்பத்தை தந்துள்ளான். பக்கத்துவீட்டு செல்வத்தை கொலை செய்துவிட்டு தப்பித்துவிடுகிறான். அதனால் சிறுது காலம் அம்மாவை சிறையில் அடைகின்றனர். இந்த காரணத்தினாலும் தந்தையின் மீது வெறுப்பு உண்டாகிறது.

அழகர்சாமி சிறையில் உள்ள காலங்களாலும் அங்கிருந்த விஜிக்கு உதவி செய்கிறேன் என்ற பெயரில் பகையை வளர்த்துள்ளார். இதனை, "எப்போ உங்க ஐயாவோடு சேர்ந்து தொழில் பண்ண ஆரம்பிச்சனோ அப்பவே நிறைய பகைய சம்பாதிச்சிட்டண்டா" என்ற வரிகளில் அழகர்சாமியால் விஜி அடைந்த துன்பங்களை வெளிப்படுத்துகின்றன (Lakshmi Saravanakumar, 2018).

இத்தகைய தவறுகளை எல்லாம் செய்த தன் தந்தை சந்தோஷமாக உள்ளானே, அவனை கொலை செய்ய வேண்டும் என முடிவு செய்கிறான். முருகனின் உதவியுடன் கதிர் அழகர்சாமியை கொலை செய்கிறான். "வாழ்நாள் முழுவதும் அவமானப்படுத்தப்பட்டவனின் இருதயம் எத்தனை குரூரமானதென்பதை அழகர்சாமி பல காலம் மற்றவர்களுக்கு காட்டிப் கொண்டிருந்தார். இப்பொழுது அவரது மகன் அவருக்கு காட்டிக் கொண்ருந்தான்" என்ற வரிகளில் கதிர் தன் சிறுவயது முதல் தந்ததையால் அடைந்த அவமானம், துன்பம், கஷ்டம் எல்லாம் வன்மமாக மாறி கதிர் கொலைகாரனாக உருவெடுத்தமையை உணர்த்தி நிற்கிறது (Lakshmi Saravanakumar, 2018).

## முடிவுரை

கொமோரோ நாவலானது வன்மத்தின் வெளிப்பாடாகவே நகர்கின்றது. உறவுகளில் கொண்டுள்ள அன்பையும், வன்மத்தையும் காட்டுவதாக உள்ளது. குடும்பம் என்பது கணவன், மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்களையும் உள்ளடக்கியதேயாகும். கணவன் மனைவி என்ற உறவுகள் கொமோரோ நாவலில் அன்பினை உடையதும், பொய்மையான அன்பு மற்றும் அன்பில்லா உறவுநிலைகளில் உள்ளமையை எடுத்துக் கூறுகிறது. நண்பர்கள் என்கிற உறவுநிலையில் நல்ல நண்பனின் நட்பினால் கல்வி மற்றும் வாழ்வில் நண்பன் உயர வேண்டும் என்ற அன்பின் வெளிப்பாடாய் உள்ளமையையும், அதே வேளையில் தீய நட்பின் விளைவாக உடல் இச்சைகளும், கொலைக்கு உதவுபவனாக தீய நண்பன் உள்ளமையையும் புலப்படுத்துகிறது. உன்னதமான உறவாக கருதப்படுவது தந்தை மகன் உறவு. இத்தகைய உன்னதமான உறவிற்கு உதாரணமாக தந்தை உள்ளமையையும் (ஆனந்தன்), மகனின் வாழ்க்கைக்காக தந்தையே தன்னை மாய்த்துக்கொண்டமையும், உன்னதமான உறவிற்கு தொடர்பில்லாமையாக உள்ள அன்பில்லா தந்தையால் மகன் பெறும் துன்பம், வெறுப்பு, அவலம் இவற்றின் காரணமாக மகன் தந்தையையே வன்மத்தினால் கொலை செய்யும் நிலையையும் உணர்த்துகிறது.

## References

Balusamy, N. (1992), Vazhviyal Kalanjiyam, volume 12, Tamil University, Thanjavur, India.

Lakshmi Saravanakumar, (2018) Gomorrah, Kizhakku Pathippagam, Chennai, India.

Mahalingam, P. (2005) Thiru.vee.kaa.vin Samuthaiya Nokku, Selvam Pathippagam, Chennai, India.

Pascual Gisbert, L.K. (1964) Samoogaviyalin Adipadaik kotpadukal, Tamil Veeliyeedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License